தினமணி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 38.04 அடி

First Published : 22 Aug 2012 09:09:16 AM IST

ஈரோடு, ஆக.21: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 38.04 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 553 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் இருந்து ஆற்றில் 650 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. கால்வாயில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.15 டி.எம்.சி.

தண்ணீரின்றி வாடும் மரவள்ளிக்கிழங்கு பயிர் கவலையில் கடம்பூர் விவசாயிகள்

டி. சாம்ராஜ்

First Published : 22 Aug 2012 09:23:35 AM IST

சத்தியமங்கலம், ஆக. 21: பருவமழை ஏமாற்றியதால், கடம்பூர் மலைப்பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளிக் கிழங்கு பயிர் வாடி வருகிறது.

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் உள்ள கடம்பூர், கரளையம், எக்கத்தூர், சுஜில்கரை, கோட்டமாளம், மாக்கம்பாளையம், குன்றி இருட்டிபாளையம் மற்றும் அணைக்கரை ஆகிய இடங்களில் மானாவாரி முறையில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் பழங்குடியின மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் ஜவ்வரிசி ஆலைகளுக்கான கிழங்குகள் இங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

கடம்பூர் மலைப்பகுதி செம்மண் நிலமாக இருப்பதால் ஏக்கருக்கு 12 டன் வரை மகசூல் கிடைக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு டன் ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரம் வரை விற்பனையானது. இந்நிலையில், கடந்த ஆண்டு மரவள்ளிக்கிழங்கில் மாவுப்பூச்சி தாக்கியதால் ஏக்கருக்கு 3 டன் மட்டுமே மகசூல் கிடைத்தது.

மேலும், மரவள்ளிக்கிழங்கு மாவு இறக்குமதி செய்யப்பட்டதாலும், ஜவ்வரிசி ஆலைகளில் இருந்து கழிவுநீரை அகற்றுவதில் ஏற்பட்ட பிரச்னை காரணமாகவும் ஆலைகளைத் தொடர்ந்து இயக்குவது கேள்விக்குறியானது. இதனால், மரவள்ளிக் கிழங்கை கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயங்கினர். இதன் எதிரொலியாக, மரவள்ளி டன் ஒன்றுக்கு ரூ. 2400 மட்டுமே கிடைத்தது. விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

இத்தகைய காரணங்களால் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்கினர். இருப்பினும், நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பலர் மரவள்ளி பயிரிட்டுள்ளனர். இப்போது பயிர்கள் ஒரளவு வளர்ந்துள்ள நிலையில், வறட்சியின் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

நடவுக் கூலி, உரச் செலவு, பராமரிப்புச் செலவு மற்றும் வண்டி வாடகை என்று ஏராளமாகச் செலவாகிறது. கிடைக்கும் விலை அதற்கே போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து தமிழ்நாடு பழங்குடியினர் சங்கத் தலைவர் கடம்பூர் கே. ராமசாமி செவ்வாய்க்கிழமை கூறியது:

கடம்பூர் மலைப்பகுதி மானாவாரி நிலம் என்பதால் மழையை எதிர்பார்த்துதான் விவசாயம் செய்ய வேண்டியுள்ளது. பருவமழை ஏமாற்றியதால், 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட மரவள்ளிக் கிழங்கு பயிர் வாடுகிறது. இதனால் பெரும் இழப்பைச் சந்தித்து வரும் விவசாயப் பழங்குடியின மக்களுக்கு அரசு மானிய விலையில் உரம், பூச்சி மருந்து, கறவை மாடுகள் மற்றும் வட்டியில்லாக் கடன் வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்றார்.

## பருவ மழை பொய்த்ததால் அணைகளில் நீர்மட்டம் குறைவு

First Published : 21 Aug 2012 12:41:08 PM IST

தேனி, ஆக. 20: தேனி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததால் ஆறு மற்றும் காட்டாற்று ஓடைகளில் நீர் வரத்தின்றி அணைகளில் நீர் மட்டம் குறைந்து வருகிறது.

மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததாலும், பெரியாறு அணையில் இருந்து போதிய தண்ணீர் திறந்து விடப்படாததாலும் முதல் போக நெல் சாகுபடி தடைப்பட்டுள்ளது. ஆறுகளில் நீர் வரத்தின்றி அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

வைகை அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 35.53 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 28 கன அடி. ஆண்டிபட்டி-சேடபட்டி, மதுரை குடிநீர் திட்டங்களுக்கு அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மஞ்சாளறு அணை நீர் மட்டம் 34.70 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 5 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 30 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

பெரியாறு அணை நீர் மட்டம் 116 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 674 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 256 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

## பணவீக்கம் லேசாக குறைவு

First Published : 22 Aug 2012 12:54:29 AM IST

புது தில்லி, ஆக. 21: ஜூலை மாதத்துக்கான சில்லறை விற்பனை பணவீக்க விகிதம் லேசாகக் குறைந்துள்ளதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஜூலை மாதத்துக்கான பணவீக்கம் 9.86 சதவீதமாக இருந்தது.
கடந்த ஆண்டு ஜூலை மாதத்தை ஒப்பிடும்போது இவ்வாண்டு ஜூலையில் காய்கறிகளின் விலை அதிகபட்சமாக 27.33 சதவீதம் உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெயின் விலை 17.37 சதவீதம் அதிகரித்தது. பருப்பு வகையறாக்களின் விலை 12.49 சதவீதம் அதிகரித்துள்ளது.
இந்த மாதத்தில் முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை 11.11 சதவீதம் அதிகரித்தது. சர்க்கரையின் விலை 9.06 சதவீதம் கூடியது. உணவுப் பொருள்கள், ஆடைகள், காலணிகள் ஆகியவற்றின் விலை உயர்வு விகிதம் இரு இலக்கத்தை தொட்டது.
ஜூலை மாத பணவீக்க விகிதம் லேசாக குறைந்தாலும் இது நீடிக்காது என சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உணவுப் பொருள்களின் விலை தொடர்ந்து அதிகமாக இருப்பது இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.
ஆயினும் இவ்வாண்டு பருவமழை குறைந்துள்ளதால் உணவுப் பணவீக்கம் அதிகமாக இருக்கும் என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.
ஜூன் மாதத்தில் சில்லறை விற்பனை பணவீக்க விகிதம் திருத்தி வெளியிடப்பட்டது. ஜூன் மாத சில்லறை விற்பனைப் பணவீக்க விகிதம் 9.93 சதவீதமாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. முன்பு இது 10.02 சதவீதம் எனக் கூறப்பட்டது.
மொத்த விலையில் பணவீக்க விகிதம் ஜூன் மாதத்தை ஒப்பிடுகையில் சற்றே குறைந்துள்ளது. ஜூனில் 7.25 சதவீதமாக இருந்த மொத்த விலை பணவீக்கம் ஜூலையில் 6.87 சதவீதமாகக் குறைந்தது.

தினமலர்
உண்மையின் உரைகல்

# ஆட்டுக்குட்டி பராமரிப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,00:00 IST



இன்றைய ஆட்டுக்குட்டியே வருங்கால உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும், வலிமையான சந்ததிகளை உருவாக்கும் தூண்களாகவும் இருக்கும். ஆகவே, இளம் குட்டிகளைக் கண்ணும் கருத்துமாகப் பண்ணையாளர்கள் பேணவேண்டும். சினை ஆடுகள் குட்டி போடும் நாள் நெருங்கும் பொழுது சுத்தமான தனிச் சூழ்நிலைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அவை தங்கும் அறைகள் கிருமிநாசினி கொண்டு முதலிலேயே சுத்தம் செய்யப்பட்டு தனித்தனி அறைகளில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

## தொப்புள் கொடியை வெட்டுதல்:

குட்டி பிறந்தவுடன் வால் மற்றும் நாசி துவாரத்தில் காணப்படும் பிசுபிசுப்பான திரவத்தைச் சுத்தமான துணி கொண்டு துடைத்துவிட வேண்டும். சரியாக மூச்சுவிடாத குட்டிகளின் பின்கால்களை மேலே தூக்கி சுற்ற வேண்டும். குட்டிகள் பிறந்தவுடன் தொப்புள் கொடியை 2

செ.மீ. அளவு நீளம் விட்டு மெல்லிய நூலினால் கட்டியபிறகு அதற்குக் கீழே கத்தரிக்கோலால் கத்தரித்தபின் டிங்சர் அயோடின் மருந்துகொண்டு தடவ வேண்டும்.

### சீம்பால்:

குட்டிகள் பிறந்து 30 நிமிடம் முதல் 45 நிமிடங்களுக்குள் எழுந்து தாயிடம் பால் குடிக்க முயற்சிக்கின்றன. அப்படி அவையாக எழுந்திருக்க முடியவில்லை என்றால் அவற்றுக்கு உதவ வேண்டும். சீம்பாலில் சாதாரண பாலைவிட ஏழுமடங்கு புரதச்சத்தும், இரண்டு பங்கு மொத்த திடப்பொருட்களும் உள்ளன. இதில் நோய் எதிர்ப்புசக்தி உள்ளது. இது குட்டிகளுக்கு மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும். பிறந்த ஒவ்வொரு குட்டியும் தனித்தனியாகக் கவனிக்கப்பட வேண்டும். குட்டிகளின் சிறுகுடல் சுவர்கள், நோய் எதிர்ப்பு சக்திப் பொருட்களை உட்கிரகிப்பதற்கு வசதியாக அமைந்திருக்கும். நேரம் செல்லச்செல்ல சிறுகுடலின் உட்கிரகிக்கும் திறன் குறைந்துவிடும். எனவே சீம்பாலைக் குட்டி பிறந்த உடனே 15 நிமிடங்களுக்குள் குட்டிகளுக்கு தவறாமல் கொடுக்க வேண்டும்.

### அடையாளக் குறியிடுதல்:

சிறந்த பராமரிப்புக்காகக் குட்டிகளுக்கு நிரந்தர அடையாளக் குறியிடவேண்டும். இதைக் காதில் உலோகக் (அலுமினியம்/பித்தளை) காதணிகளை அணி வித்துச் செயல்படுத்தலாம். கழுத்தில் அடையாளக் குறித்தகடுகளைச் சங்கிலிமூலம் தொங்கவிடலாம்.

### எடை பார்த்தல்:

வளரும் பருவத்தில் குட்டிகளின் எடையைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். இது தீவன அளவைக் கட்டுப்படுத்திக் கொடுக்கவும் நோய் வருமுன் கண்டறியவும் உதவும்.

### வெள்ளாட்டின் பொருளாதார குணாதிசயங்கள்:

பருவ வயது: 6-8 மாதங்கள்; இனப்பெருக்கத்திற்குத் தயாராகும் வயது: 9 மாதங்கள்; சினைக்குத்

தயாராகும்பொழுது அடையும் எடை: 10-30 கிலோ; பருவ சுழற்சி: 19 நாட்கள்; சினைப்பருவக் காலம்: பருவச்சுழற்சி தொடங்கிய 24வது மணி நேரம்; சினைக்காலம்: 150 நாட்கள்; குட்டி ஈன்றபின் அடுத்த சினைப்பருவம்: 21 நாட்கள் கழித்து; இனப்பெருக்கக் காலம்: 6-10 ஆண்டுகள்; விற்பனை வயது: 6-9 மாதங்கள்; விற்பனை வயதில் எடை: 20-25 கிலோ.

**தொடர்பு:**

கால்நடை மருத்துவர் செல்வராஜ், திருப்பூர், போன்: 0421-224 8524.-**கே.சத்தியபிரபா, உடுமலை.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,00:00 IST

## மாடுகளில் மலட்டுத்தன்மை:

மாடுகள் தற்காலிகமாக சினைபிடிக்காத நிலையே மலட்டுத் தன்மையாகும். அதாவது ஒரு மாட்டிலிருந்து ஒரு வருடத்திற்கு ஒரு கன்று பெற முடியாத நிலையாகும். மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் காரணிகளில் மாடுகளக்கு கருவூட்டல் செய்யப்படும் தருணம் முக்கிய மானதாகும். சினைப்பருவ அறிகுறிகள் தென்பட்ட 6 முதல் 8 மணி நேரத்திற்கு பிறகு சினைக்குச் சேர்க்க வேண்டும். பொதுவாக மாடுகள் சினை தருணத்தை 8 முதல் 24 மணி நேரம் அளவிற்கு வெளிப்படுத்தும். மாடுகளில் காலையில் சினைப்பருவ அறிகுறிகள் தென்பட்டால் மாலை வேளையிலும் மாலையில் சினைப்பருவ அறிகுறிகள் தென்பட்டால் காலை வேளையிலும் சினைக்குச் சேர்க்க வேண்டும்.

மாடுகளை பொலி காளைகளுக்குச் சேர்ப்பதைவிட செயற்கை முறையில் கருவூட்டல் செய்வதே சிறந்ததாகும். செயற்கை முறை கருவூட்டலில் நன்கு சுத்திகரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை உபயோகப்படுத்துவதால் நோய் பரவும் விதம் தடுக்கப்படுவதுடன் மாடுகளில் கருத்தரிக்கும் திறனும் அதிகரிக்கிறது. செயற்கை முறை கருவூட்டல் செய்ய சந்தர்ப்பம் இல்லை எனில் நல்ல தரமுடைய நோயற்ற பொலிகாளைகளுடன் சினைக்குச் சேர்க்கலாம்.

ஊமைச்சினை அல்லது பொயச்சினை மூலமும் மாடுகளில் மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த வகை மாடுகள் சினைப்பருவ அறிகுறிகள் எதையும் வெளிப்படுத்தாது.

ஆனால் ஆசன வாயைப் பரிசோதனை செய்து பார்த்தால் மாடுகள் சினைப்பருவத்தில் இருப்பது தெரியும்.

மாடுகளை சினைக்குச் சேர்க்க மருத்துமனைக்கு அழைத்துவரும் பொழுதும் சினைக்கு சேர்த்தபிறகு அழைத்துச் செல்லும்போதும் அடித்து வேகமாக ஓட்டிச்செல்லக்கூடாது. சினைக்குச் சேர்த்தபிறகு மாடுகளை 10 முதல் 15 நிமிடமாவது கட்டி வைத்து பிறகு அழைத்துச்செல்ல வேண்டும். சில மாடுகளை கன்று ஈன்ற பிறகு பல மாதங்களுக்குப் பிறகு சினையூட்டல் செய்கிறார்கள். ஏனெனில் உடனடியாக மாடுகள் சினைப்பட்டால் பால் உற்பத்தி குறைந்துவிடும் என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் இது முற்றிலும் தவறு. ஏனெனில் கன்று ஈன்ற 60 முதல் 90 நாட்களுக்குள் மாடுகள் வெளிப்படுத்தும். சினைப்பருவத்தில் சினைக்குச் சேர்க்கவில்லை எனில் மாடுகளில் சினைபிடிக்கும் தன்மை குறைந்துவிடுவதுடன் வருடம் ஒரு கன்று பெற முடியாத நிலை ஏற்பட்டு தேவையற்ற தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவுகளால் பெருத்த நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவற்றைத் தவிர்க்க மாடுகளை குறித்த நேரத்தில் சினைக்குச் சேர்க்க வேண்டும்.

பொதுவாக கிடாரிக் கன்றுகளை சினைக்குச் சேர்க்கும்போது அதனுடைய வயது, உடல் எடை, கருப்பையின் வளர்ச்சியை கவனத்தில் கொள்ள வேண்டும். பசுக்கன்றுகளாக இருந்தால் ஒன்றரை வயதிலும் எருமைக் கன்றுகளாக இருந்தால் 3 வயதிலும் சினைக்குச் சேர்க்க வேண்டும். கன்றின் உடல் எடையும் உருவமும் தாயைப்போல் மூன்றில் இரண்டு மடங்கு இருக்க வேண்டும். கருப்பை வளர்ச்சி நன்றாக இருக்க வேண்டும்.

வைட்டமின்கள் கால்நடைகளில் சினைப் பருவத்தில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. அதாவது கருப்பையில் உள்ள எபித்தீலிய செல்களைப் புதுப்பித்துக்கொள்ள இந்த வைட்டமின்கள் மிகவும் அவசியமாகும். எனவே வைட்டமின்கள் பற்றாக்குறை ஏற்படும்பொழுது மாடுகளில் சினைபிடிக்கும் தன்மை குறைவதுடன் மலட்டுத் தன்மை, ஆரம்பகால கருச்சிதைவு போன்றவைகளும் நடைபெறும். அதேபோல் பசுந்தீவனம் மட்டும் அளிக்கப்படும் பகுதிகளில் பாஸ்பரஸ் தாது உப்பின் பற்றாக்குறை ஏற்பட்டு மலட்டத்துன்மை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மாடுகள் சினைபிடிப்பதில் தாது உப்புக்கள் மற்றும் வைட்டமின்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்தமட்டில் மலட்டுத் தன்மையை ஏற்படுத்துவதில் தீவனப் பற்றாக் குறையே முக்கிய பங்கு வகிக்கின்றன. தீவனப் பற்றாக்குறையால் ஏற்படும் மலட்டுத் தன்மையை ஒரு குறிப்பிட்ட ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படுகின்றன என்று அறுதியிட்டுக் கூற முடியாது. சமச்சீர் தீவனம் அளிப்பதன் மூலம் தீவனப் பற்றாக்குறையால் ஏற்படும் மலட்டுத் தன்மையை

சரிசெய்ய முடியும். (தகவல்: ம.பழனிச்சாமி, ச.மனோகரன், மா.செல்வராஜு, கா.ரவிக்குமார், வை.பிரபாகரன், ரா.எசகியால் நெப்போலியன், கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறை, கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-637 002)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**வசம்பு பயிர் வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,00:00 IST



இந்திய மருத்துவத்தில் வசம்பு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக சித்த மருத்துவத்தில் வசம்பு பல விதங்களில் பயன்படுகிறது. இது நீர்ப்பிடிப்புள்ள காடுகளில் இயற்கையாக வளர்கின்றது. வசம்பு வேர் மற்றும் கிழங்குகள் இயற்கைச் சூழ்நிலையிலிருந்து சேகரிக்கப்பட்டு உபயோகப் படுத்தப்படுகிறது. வசம்பு வேர்களுக்கு வெளிநாடுகளில் அதிகளவில் தேவை இருந்து வருகிறது. தற்போது கேரளாவில் சுமார் 200 எக்டர் பரப்பளவிற்கு மேல் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. வசம்பு, இஞ்சி தாவரவியல் குடும்பத்தைச் சார்ந்தது. இவைகள் 60 முதல் 90 செ.மீ. உயரம் வரை வளரக்கூடிய பயிர்வகையாகும். வசம்பு வேர்கள் சரியாக 50 முதல் 60 கிராம் எடையுள்ளவை. வேர்கள் மஞ்சள் கிழங்கினைப் போன்று நெருக்கமான கணுக்களை உடையது. வேர்கள் ஒரு மீட்டர் வரை அகலமாகப் படரும். பக்க வேர்கள் வேகமாக வளரும் தன்மை உடையவை.

களிமண் மற்றும் நீர்பிடிப்புள்ள மண் வகைகள் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றவை. ஆற்றுப் படுகையில் நீரோட்டம் உள்ள ஓரங்களில் இதனை சாகுபடி செய்யலாம். நெற்பயிர் சாகுபடிக்கு உகந்த நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் சாகுபடி செய்யலாம். வெப்பமான தட்பவெப்ப நிலையில் நன்றாக வளரும். ஆனால் ஆண்டு முழுவதும் சீரான மழையளவு இருப்பது அவசியம்.

செடிகளின் துரித வளர்ச்சிக்கு அதிக அளவு சூரிய ஒளி இருப்பது நல்லது. வசம்பு மருந்துப் பயிரைச் சமவெளியிலும் மலைப் பிரதேசங்களிலும் சாகுபடி செய்யலாம்.

வசம்பு வேர் அல்லது கிழங்குகளை விதைப்பதற்கு பயன்படுத்தலாம். எக்டருக்கு 1500 கிலோ கிழங்கு தேவைப்படும். நீர்க்கசிவு உள்ள இடங்களைத் தேர்வு செய்து ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரமிட்டு மண்ணில் தண்ணீர் தேங்கும் வண்ணம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். சேற்று உழவு செய்து பண்படுத்த வேண்டும். விதைக்கிழங்குகளை 30 செ.மீ. இடைவெளியில் நேர்கோடுகளில் விதைக்க வேண்டும். வரிசையில் விதைக்கப் பட்ட கிழங்குகள் அடுத்த வரிசையில் விதைத்த கிழங்குகளுக்கு நேராக இல்லாமல் இரண்டு கிழங்குகளுக்கு மையமாக விதைக்க வேண்டும். இதனால் வேர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

ஒரு எக்டருக்கு 10 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 60 கிலோ சாம்பல்சத்து தரவல்ல உரங்களை அடியுரமாக விதைப்பதற்கு முன் இடவேண்டும். விதைத்த நான்காவது மற்றும் எட்டாவது மாதத்தில் 10 கிலோ தழைச்சத்து உரத்தை மேலுரமாக இடவேண்டும். மண்ணில் எப்போதும் ஈரத்தன்மை இருக்குமாறு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைத்த முதல் இரண்டு மாதங்களுக்கு 5 செ.மீ. உயரம் தண்ணீர் நிறுத்தப்பட வேண்டும். பிறகு 10 செ.மீ. உயரத்திற்கு தண்ணீர் நிறுத்த வேண்டும். விதைத்த ஒரு மாதத்திலும் பிறகு இரண்டு மாதங்கள் இடைவெளியிலும் ஐந்து அல்லது ஆறு முறை களை எடுக்க வேண்டும். ஒவ்வொரு முறை களை எடுக்கும் போதும் வரும் வசம்பு வேர்களை காலால் மிதித்து ஆழமாக மண்ணில் அழுத்திவிட வேண்டும். இதனால் கிழங்குகளின் வளர்ச்சியினை துரிதமடையச் செய்யலாம்.

மாவுப்பூச்சிகள் இலைகளையும் வேர்களையும் அதிகம் தாக்கும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு மி.லி. மீத்தைல் பாரத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகளின் மீது தெளிக்க வேண்டும். வேரில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்த 2 மி.லி. குவினைல்பாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து வேர் நனையும்படி ஊற்ற வேண்டும்.

### அறுவடை:

விதைத்த ஒரு ஆண்டில் வேர்களை அறுவடை செய்யலாம். அறுவடை செய்வதற்கு முன் வயலில் உள்ள நீரை வடித்து மண்ணை சிறிதளவு காயப்போட வேண்டும். பிறகு இலைகள் பழுப்பு நிறமாக மாறிக் காய்ந்துவிடும். இப்பொழுது 60செ.மீ. ஆழத்தில் 60 முதல் 90 செ.மீ. வரை அகலமாக வளர்ச்சி பெற்றிருக்கும் கிழங்குகளை மண்ணைத் தோண்டி கிழங்கு மற்றும் வேர்களை அறுவடை செய்யலாம். இந்த சமயத்தில் கிழங்குகள் மண்ணிற்கடியில் வேர்களை கவனமாகத் தோண்டி எடுத்த 5 முதல் 7 செ.மீ. நீளத்தில் வெட்ட வேண்டும். சல்லி வேர்கள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். தண்ணீரில் கிழங்குகளைக் கழுவி வெயிலில் உலர்த்த வேண்டும். உலர்த்தப்பட்ட கிழங்குகளின் மேல் உள்ள செதில் பகுதியை நீக்குவதற்காக சாக்குப்பையில்

போட்டு நன்றாகத் தேய்க்க வேண்டும்.

**மகசூல்:**

ஒரு எக்டருக்கு சராசரியாக 10 டன் உலர்ந்த கிழங்குகள் கிடைக்கும்.
முனைவர் பொ.பாலசுப்பிரமணி, இணைப்பேராசிரியர் (தோட்டக்கலை), ந.தீபாதேவி மற்றும் பா.பானுப்பிரியா, தோட்டக் கலைத்துறை, வேளாண்மைக்கல்லூரி, மதுரை.

ஆகஸ்ட் 21,2012,23:47

**சென்ற ஜூலை மாதத்தில்...சில்லரை பணவீக்கம் 9.86 சதவீதமாக சரிவு**



புதுடில்லி:சென்ற ஜூலை மாதத்தில், நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான சில்லரை பணவீக்கம் 9.93 சதவீதத்தில் இருந்து 9.86 சதவீதமாக குறைந்துள்ளது.நறுமண பொருட்கள்மதிப்பீட்டு மாதத்தில், காய்கறி விலை உயர்ந்திருந்த போதிலும், நறுமணப் பொருட்கள், தானிய வகைகள் ஆகியவற்றின் விலை குறைந்திருந்தன. இதனால், சில்லரை பணவீக்கம் குறைந்துள்ளது.சென்ற ஜூன் மாதத்தில், தற்காலிக மதிப்பீட்டின்படி 10.02 சதவீதமாக அறிவிக்கப்பட்ட, சில்லரை பணவீக்கம், மறுமதிப்பீட்டில் 9.93 சதவீதமாக குறைந்திருப்பதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கணக்கீட்டு மாதத்தில், காய்கறிகள் விலை, மிகவும் அதிகபட்சமாக 27.33 சதவீதம் வரை உயர்ந்திருந்தன. இதை தொடர்ந்து, சமையல் எண்ணெய் விலை 17.37 சதவீதமும், பருப்பு வகைகள் விலை 12.49 சதவீதமும் உயர்ந்திருந்தது.முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றின் விலை 11.11 சதவீதமும், குளிர்பானங்கள் விலை 9.26 சதவீதமும் உயர்ந்திருந்தன. தானிய

வகைகளின் விலை 6.45 சதவீதம் உயர்ந்திருந்தது. சர்க்கரை விலை 9.06 சதவீதம் அதிகரித்திருந்தது. உணவு மற்றும் குளிர்பானங்கள், துணிகள், படுக்கை மற்றும் காலணி துறைகளின் பணவீக்கம், தொடர்ந்து இரட்டை இலக்கத்திலேயே இருந்தன. சென்ற ஜூலையில், ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில், சில்லரை பணவீக்கம், முறையே 9.76 சதவீதம் மற்றும் 10.10 சதவீதம் என்ற அளவில் உயர்ந்திருந்தது.பொது பணவீக்கம்சென்ற ஜூன் மாத நிலவரப்படி, ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில், சில்லரை பணவீக்கம், முறையே 9.65 சதவீதம் மற்றும் 10.44 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையிலான, நாட்டின் பொது பணவீக்கம், சென்ற ஜூலையில் 6.87 சதவீதமாக இருந்தது. இது, முந்தைய ஜூன் மாதம் 7.25 சதவீதமாக காணப்பட்டது.

ஆகஸ்ட் 21,2012,23:45

**தேனி மாவட்டத்தில்... ஐந்து கோடி தேங்காய்கள் தேக்கம்**



தேவாரம்:ஆந்திரா, கர்நாடகாவில் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும்,சந்தையில் சரியான விலை கிடைக்காததாலும், தேனி மாவட்டத்தில் ஐந்து கோடி தேங்காய்கள் தேக்கமடைந்துள்ளன.தேனி மாவட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கு, வருஷநாடு, போடி, பெரியகுளம், சுருளியாறு, மஞ்சளாறு பாசன பகுதிகளில், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. தேங்காய் நெற்றை மொத்த கொள்முதல் செய்து, உரித்து தேங்காயாக பிரித்து, வட மாநிலங்களுக்கு அனுப்பும் பணியில் நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர்.சில மாதங்களுக்கு முன், 8 ரூபாய்க்கு விற்பனையான தேங்காய், விலை சரிந்து 4 ரூபாய்க்கும் குறைவாக விலை போகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் விலையை விட, விற்பனை விலை குறைவாக இருப்பதால், தேங்காய்களை உரிக்காமல் நெற்றாக குவித்து வைத்துள்ளனர். தேனி மாவட்டத்தில் மட்டும் 5 கோடிக்கும் மேற்பட்ட தேங்காய் நெற்றுகள்

தேக்கம் அடைந்துள்ளன.விற்பனை விலை மந்தமாக இருப்பதால், நூற்றுக்கணக்கான தேங்காய் உரிக்கும் தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கின்றனர். தேங்காய் மொத்த வியாபாரி கோம்பை கணேசன் கூறியதாவது:ஆந்திரா, கர்நாடகாவிலிருந்து வடமாநிலங்களுக்கு அதிகளவில் தேங்காய் அனுப்பப் படுகிறது. போக்குவரத்து செலவு அதிகமாவதால், தமிழகத்தில் இருந்து தேங்காய் கொள்முதல் செய்ய வடமாநில வியாபாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். விலை குறைவால் கிடங்கு களில் பல லட்சம் தேங்காய்கள் தேங்கியுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 21,2012,23:45

**பதுக்கலால் தமிழகத்தில் ரசாயன உரங்கள் விலை கடும் உயர்வு**



- நமது நிருபர் -ரசாயன உரங்களின் விலை, தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தனியார் கடைகளில் பதுக்கி வைத்து, கூடுதல் விலைக்கு வியாபாரிகள் உரத்தை விற்பனை செய்வதாகவும் புகார் எழுந்துள்ளது.தழைச்சத்துநெல், மஞ்சள், வாழை போன்ற பயிர்களுக்கு, டீ.ஏ.பி., மற்றும் காம்ப்ளக்ஸ் உரத்தை, விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். பயிர்கள் செழித்து வளர, தழைச் சத்துக்காக யூரியா உரமும், மணிச் சத்துக்கு, பொட்டாஷ் உரத்தையும், பயன்படுத்துகின்றனர்.டீ.ஏ.பி., காம்ப்ளக்ஸ், யூரியா, பொட்டாஷ் ஆகிய உரங்களை, அதிகளவில் விவசாயிகள் கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளின் நலன் கருதி, தமிழக அரசு, கூட்டுறவு சங்கத்தின் மூலம் மானிய விலையில், யூரியா உரங்களை வழங்கி வருகிறது.இந்நிலையில், டீ.ஏ.பி., காம்ப்ளக்ஸ், பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள், விலை உயர்ந்துள்ளதோடு, தனியார் உரக் கடைகளில், அத்தியாவசிய உரங்களை பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்று வருவதாகவும், விலை பட்டியல் விவரங்களை, கடையில் வைப்பதில்லை எனவும் புகார் எழுந்துள்ளது.கூட்டுறவு சங்கம்இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது:கூட்டுறவு சங்கத்தில், 50

கிலோ யூரியா உர மூட்டை, 266 ரூபாயும், பொட்டாஷ் உரம், 740 ரூபாயும், டீ.ஏ.பி., உரம், 890 ரூபாயும், 20:20 காம்ப்ளக்ஸ் உரம் மற்றும் 10:26 கலப்பு உரம், 700 ரூபாய் வரையிலும் விற்கப்படுகின்றன.தனியார் கடைகளில், யூரியா மூட்டைக்கு, 300 ரூபாய் வரை அதிகரித்தும், பொட்டாஷ், 800 ரூபாய், டீ.ஏ.பி., 1,200 ரூபாய், காம்ப்ளக்ஸ் மற்றும் கலப்பு உரம், 1,000 ரூபாய் என, கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. டீ.ஏ.பி., உரம் விலை, 30 முதல் 50 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.கூட்டுறவு சங்கங்களில் விலை குறைவாக இருந்தாலும், அங்கு போதுமான உரம் வினியோகம் செய்யப்படுவதில்லை. இதனால், தனியார் கடைகளை நாட வேண்டிய அவசியம், விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. தனியார் கடைகளில், கூடுதல் விலைக்கு, உரம் விற்பனை செய்வதால், விலை பட்டியல் வைப்பதில்லை.பருவ மழை துவங்கியதும், நடவுப் பணி துவங்கும் என்பதால், உரங்களை குடோன்களில், அதிகளவில் பதுக்கி வைத்துள்ளனர். உரத்துக்கு செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, விலையை உயர்த்தி வருகின்றனர். வேளாண்துறை அதிகாரிகளிடம், புகார் செய்தாலும், உர விலை மற்றும் பதுக்கலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.இறக்குமதிகூட்டுறவு சங்க உரம் விற்பனை பிரிவு மற்றும் வேளாண் அலுவலர்களிடம் கேட்டபோது, "ரசாயன உரங்கள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதால், தேவைக்கு ஏற்ப அனைத்து மாவட்டங்களுக்கும், உரங்கள் வினியோகம் செய்யப்படுகின்றன. கூட்டுறவு சங்கத்தில், உரம் விலை உயர்த்தப்படவில்லை; தனியார் கடைகளில், உரங்களை கூடுதல் விலைக்கு விற்றாலோ அல்லது பதுக்கினாலோ, கடும் நடவடிக்கை எடுக்க, அரசு உத்தரவிட்டுள்ளது' என்றனர்.

## தேயிலை ஏலத்தில் விலை ஏற்றம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2012,23:52 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் தேயிலை தூளுக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் கிடைத்தது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் ஏல மையத்தின் 33வது ஏலத்தில் 12.91 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 9.67 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.24 லட்சம் கிலோ அடங்கும். உள்நாடு மற்றும் வெளிநாடு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டதால் 91 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் கிடைத்தது. சாதாரண இலை ரகம் கிலோ ஒன்று 65 ரூபாய் முதல் 67 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 ரூபாய் முதல் 130 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகம் சாதாரண வகை 74 ரூபாய் முதல் 78 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 ரூபாய் முதல் 140 வரையிலும் விற்பனையானது. "சிடிசி' ரகம் அதிகபட்சமாக 170 ரூபாய்க்கும், ஆர்தோடக்ஸ் ரகம் 173 ரூபாய்க்கு விற்பனையானது.

வரும் 23 மற்றும் 24ம் தேதிகளில் நடக்கும் 34வது ஏலத்தில் 13 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 9.57 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.43 லட்சம் கிலோவும் அடங்கும்.

**முருங்கைக்கு விலை குறைவுக.பரமத்தி விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,02:14 IST

கருத்தை பதிவு செய்ய

க.பரமத்தி: ஆவணி மாதத்தில் திருமண சீசன் தொடங்கியுள்ள நிலையில் முருங்கைக்கு திடீரென விலை சரிவு ஏற்பட்டுள்ளது. சாகுபடி செய்த முருங்கை காய்களை நஷ்டத்துக்கு விற்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.கரூர் மாவட்டம் க.பரமத்தி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் முருங்கை சாகுபடி செய்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் பருவமழை பெய்தாலும் கூட, கடுமையான வறட்சியானாலும் விவசாயிகளுக்கு ஒரளவுக்கு வருமானம் முருங்கை காய் சாகுபடி மூலம் கிடைத்தது.ஆனால், பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தால் முருங்கையின் தரம் வெகுவாக குறைந்துள்ளது.

ஆனால், முருங்கை உற்பத்தி அதிகளவில் உள்ளது. முருங்கை காய்கள் நிறம் சற்று மாறியுள்ளதால், வெளி மாவட்டம், வெளி மாநிலங்களுக்கு அனுப்ப முடியவில்லை. இதனால் உள்ளூர் சந்தைகளில் முருங்கை காய்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நடந்த வாரச்சந்தையில் இருபது காய்கள் கொண்ட முருங்கை காய் ஒரு கட்டின் விலை ஐந்து ரூபாய் 10 ரூபாய் வரை விலை போனது. அதே அளவுள்ள முருங்கைகாய், கடந்த சில மாதங்களுக்கு 100 ரூபாய் வரை விலை போனது.முருங்கை விலை குறைந்துள்ளதால், பல விவசாயிகள் சாகுபடி செய்த முருங்கை காய்களை திருப்பி எடுத்து செல்ல முடியாமல் கிடைக்கும் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.முருங்கை வியாபாரிகள் கூறுகையில், ""க.பரமத்தி பகுதியில் விளையும் முருங்கைகாய்கள் வெளிமாநிலமான கர்நாடகா, ஆந்திரா, ஹைதராபாத், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளுக்கு அதிக விலைக்கு அனுப்பப்படும். பருவமழை இல்லாததால் முருங்கையில் தரம் குறைந்துள்ளது. இதனால் உள்ளூர் சந்தைகளில் குறைந்த விலைக்கு நஷ்டத்துக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. வழக்கமாக ஆவணி மாதம் முதல் கார்த்திகை மாதம் முதல் சுப விஷேசம் காலம் என்பதால் அதிக விலை கிடைக்கும். ஆனால் தரம் குறைந்த முருங்கை சாகுபடி அதிகரித்துள்ளதால் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை,'' என்றனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,02:32 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை ஆக., 23ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடக்கிறது.விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத்திட்டம் பற்றிய முறையீடு பற்றி விவாதிக்கப்படும்.கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர்.எனவே, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

**மக்காச்சோளம், பருத்தி விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,01:13 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்: மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், மக்காச்சோள விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில், விவசாய தேவைக்கு படிப்படியாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், பெரும்பாலான பகுதிகளில் பயிரிடப்பட்டு வந்த நெல் விவசாயம் குறைந்தது. இதையடுத்து மாற்றுப்பயிராக மக்காச்சோளத்தை பெரும்பாலான விவசாயிகள் நாடினர். குறைந்த நீர் தேவையே போதுமானது என்பதால், மானாவாரியாகவும், கிணற்றுபாசனத்திலும் மக்காச்சோள விவசாயம் இன்றளவும் விவசாயிகளுக்கு கைகொடுத்து வருகிறது. இதை பாதிக்கும் வகையில் தென்மேற்கு பருவமழை பொய்த்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வைகை பாசனத்தை நம்பி 900ஹெக்டேரில் நெல் விவசாயம் செய்துவந்த விவசாயிகள் அணை திறப்பு இல்லாததால் குறுவை சாகுபடியை கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில் நத்தம் பகுதியில் மானாவாரி பயிர்களாக பயிரிடப்பட்ட தட்டைப்பயறு, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. பழநி பகுதியில் பருத்தி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பருவமழை பொய்த்ததால், ஆடிப்பட்டத்தில் தேடி விதைக்கவேண்டிய

பயிர்களை விவசாயிகள் விதைக்காமல் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இதனால், 50 ஹெக்டேர் மக்காச்சோள விவசாயம் பாதிக்கப்படும் நிலை உள்ளது. மழை குறைவு: கடந்த ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் 138.8 மி.மீ., மழை பெய்தது. இந்த ஆண்டு 63.45 மி.மீ., மட்டுமே மழை பெய்துள்ளது. மழை பொழிவு பாதியாக குறைந்துள்ளது. சென்ற ஆண்டு ஜன., முதல் ஆகஸ்ட் 21 வரை மொத்தம் 328.6 மி.மீ., மழை பெய்தது. ஆனால் இந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 175.22 மி.மீ., மட்டுமே பெய்துள் ளது. 53 சதவீதம் மழை பொய்த்துள்ளது.

**தென்னை நார் கழிவு: விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,01:39 IST

கருத்தை பதிவு செய்ய

பெரியகுளம்: பெரியகுளம் பகுதியில், தென்னை நார் கழிவை இயற்கை சுழற்சி முறையில், உரமாக நிலங்களுக்கு பயன்படுத்துவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.
பெரியகுளம் பகுதியில், ஆயிரம் ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தேங்காயில் இருந்து எண்ணெய், மட்டையிலிருந்து கயறு உட்பட தென்னையின் அனைத்து பகுதிகளும் உபயோகமாகிறது. பெரியகுளம், கள்ளிப்பட்டி, கைலாசபட்டி பகுதியில் மட்டையிலிருந்து கயறு தயாரிக்கப்பட்டு கடைசியாக நார்க்கழிவுகள் வீணாகின்றன. நார்க்கழிவுகளை தீயிட்டு கொளுத்துவதால், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது. பெரியகுளம் பகுதியில், விவசாயிகள் சிலர் வீணாகும் நார்க்கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்தி, மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்கின்றனர். ஒரு எக்டேர் பரப்பளவில் உள்ள தென்னையில் இருந்து, ஆயிரம் முதல் 1,500 வரை மட்டைகள் கிடைக்கின்றன. இவற்றில் இருந்து ஒரு டன் எடையுள்ள நார்க்கழிவுகள் கிடைக்கும். இந்த நார்க்கழிவுகளை சிப்பிக்காளான் பயன்படுத்தி, சத்துமிக்க இயற்கை உரமாக தயாரிக்கலாம். என விவசாயிகள் தெரிவித்தனர்.

**பசுமை வீடுகள் திட்டம்: அதிகாரிகள் விசாரணை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,01:33 IST

கருத்தை பதிவு செய்ய

உத்தமபாளையம்: ராயப்பன்பட்டியில் "பசுமை வீடுகள்' திட்டத்தில், நடந்துள்ள முறைகேடுகள் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், மாவட்ட நிர்வாகம் சார்பில்,அதிகாரிகள் குழு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உத்தமபாளையம் ஒன்றியம், ராயப்பன்பட்டி ஊராட்சியில் கடந்த 2011-12 ம் ஆண்டிற்கான பசுமை வீடுகள் திட்டத்தில் வீடு, சொத்துக்கள் உள்ள சிலருக்கு முறைகேடாக வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. புகாரின் பேரில், மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள், வி.ஏ.ஓ., ஊராட்சி தலைவரிடம் ரகசிய விசாரணை நடத்தி வருகின்றனர். இத்திட்டத்தில் வேறு சில ஊராட்சிகளிலும், முறைகேடுகள் நடந்திருக்கலாம், என தெரிய வந்துள்ளது. மாவட்ட உதவி திட்ட அலுவலர்கள் பாபு(உட்கட்டமைப்பு), வடிவேல் (ஊரக வேலைவாய்ப்பு திட்டம்), கோகிலா (வீடுகள், சுகாதாரம்) ஆகியோரை கொண்ட குழுவினர், உத்தமபாளையம் ஒன்றிய அலுவலகத்தில் பி.டி.ஓ., க்கள், ஆதிதிராவிட நல அலுவலர், பசுமை வீடு திட்ட அலுவலர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். உத்தமபாளையம் ஒன்றியத்தில், 14 ஊராட்சிகளிலும் அதிகாரிகள் குழுவினர், நேற்று பயனாளிகளிடம் நேரடியாக சென்றும், விசாரணை நடத்தினர்.

## தென்னையில் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டினை சரிசெய்யும் வழிமுறைகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2012,03:35 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி : தென்னையில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் மேலாண்மை குறித்து செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் விளக்கியுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரத்தில் ஆய்க்குடி, கிளாங்காடு, கற்குடி, சாம்பவர்வடகரை பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள தென்னையில் ஆங்காங்கே நுண்ணூட்டச் சத்து குறைபாடு காணப்படுகிறது. தென்னையில் அதிக மகசூல் மற்றும் திரட்சியான காய்கள் பெற நுண்ணூட்டச்சத்து மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்தகைய முக்கிய சத்து குறைபாடு விளைநிலங்களில் ஏற்படும் போது அதன் பாதிப்பினால் காய்களும் பாதிப்பிற்குள்ளாகி விளைச்சல் குறைந்து விடுகிறது. நுண்ணூட்டங்களில் இரும்பு, போரான், துத்தநாகம், தாமிரம் மற்றும் மாங்கனீசு போன்றவை பயிர்களின் வளர்ச்சிக்கும் மற்ற சத்துக்களை பயிர்கள் எடுத்துக் கொள்வதற்கும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இரும்பு சத்து குறைவு ஏற்பட்டால் இலை நரம்புகளுக்கிடையில் வெளிர் நிறம் அடையும். அதனால் மாவுப்பொருள் தயாரிப்பு தடைபட்டு பசுமை சோகை என்ற நோய் ஏற்படுகிறது. போரான் சத்தானது இலையில் சேர்க்கப்பட்ட சர்க்கரையும் மாவுப் பொருளும் எல்லா பாகங்களுக்கும் எளிதில் கிடைக்க செய்கிறது. இச்சத்து குறைபாட்டினால் தேரைக்காய், தேங்காய் மேடு பள்ளத்துடன் உருவாகுதல், உடைத்துப் பார்த்தால் வெறும் நாறு மட்டுமே இருத்தல் மற்றும் ஒரே குலையில் சின்னதும் பெரிதுமாக காய்கள் ஏற்படுதல் போன்ற குறைபாடுகள் ஏற்படுகிறது.

தாமிரச்சத்தானது சூல் தரித்து வித்து உண்டாக மிகவும் அவசியம். இச்சத்து குறைபட்டால் மட்டையில் உள்ள இலைகள் பிரியாமல் ஒன்றுடன் ஒன்று "வெல்டு' செய்த மாதிரி காணப்படும். அதனால் மரத்தின் வளர்ச்சி தடைபடுகிறது. மாங்கனீசு இரும்பைப் போலவே பயிரில் இலைப் பச்சையம் தயாரிக்க உதவுகிறது. மேலும் புரதம் தயாரிப்பதிலும் பெரும் பங்கு வகுக்கிறது. ஒளிச்சேர்க்கையின் அளவு 30 சதவீதத்திற்கு மேல் இச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுகிறது. மொத்தமாக நுண்ணூட்ட சத்து குறைபாட்டினால் குரும்பைகள் உதிர்வதுடன் விளையும் காய்களும் பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் இத்தகைய குறைபாடுகளை நிர்த்தி செய்து அதிக மகசூலை அடைய நுண்ணூட்டச்சத்து கலவை உரத்தினை மரத்தினை சுற்றி அறை வட்ட வடிவில் குழியெடுத்து மரம் ஒன்றிற்கு வருடத்திற்கு ஒரு பாக்கெட் (ஒரு கிலோ) என்ற அளவில் இட வேண்டும். தென்னை நுண்ணூட்டக்கலவை செங்கோட்டை வட்டாரத்திலுள்ள அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் விற்பனைக்கு உள்ளது. ஒரு கிலோ பாக்கெட்டின் விலை 55 ரூபாய் 30 காசுகள் ஆகும். எனவே தென்னை விவசாயிகள் அனைவரும் நுண்ணூட்டச்சத்துக் குறைபாட்டினை மேற்கண்ட முறையில் சரி செய்து நிறைந்த மகசூலை அடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

தினகரன்

சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் நிபந்தனைகளை தளர்த்த விவசாயிகள் சங்கம் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-08-21 10:39:59

கோவை,: கோவை மாவட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளும் சொட்டு நீர் பாசனத்திற்கு மாறுவதற்கு நிபந்தனைகளை தளர்த்தவேண்டும் என்று விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது

கோவை மாவட்டத்தில் 1.73 லட்சம் எக்டர் நிலப்பரப்பு விவசாய சாகுபடி பகுதியாக இருக்கிறது. 80,700 எக்டரில் தென்னை சாகுபடியும், 1,200 எக்டரில் நெல் சாகுபடியும், 37,000 எக்டரில் சிறுதானியங்களும், 10,000 ஆயிரம் எக்டரில் பயிர் வகைகளும் சாகுபடி நடக்கிறது.

மொத்த விவசாய சாகுபடி பரப்பில் 55 சதவீத நிலங்களில் சொட்டு நீர் பாசன முறை கடைபிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில், அதிக நீர் தேவையுள்ள பயிர்களை சாகுபடி

செய்யவேண்டாம், வறட்சியை தாங்கும் பயிர்களை சாகுபடி செய்ய வேளாண் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சொட்டு நீர் பாசனத்திற்கு அரசு வழங்கும் மானியத்தால் தற்போது விவசாயிகள் பலர் அதற்கு மாறி வருகின்றனர். ஆனால் மானியத்திற்கான நிபந்தனைகளால் பாதிப்பு ஏற்படுகிறது. இதை தவிர்க்கவேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோவை மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கந்தசாமி கூறுகையில், '' வறட்சி அதிகமாகி விட்டது. தென்மேற்கு பருவ மழை ஏமாற்றி விட்டது. கிணறுகளின் நீர் மட்டம் பாதாளத்திற்கு சென்று விட்டது. கிணறுகள் வறண்டு வருவதால் விவசாயிகள் பரவலாக சொட்டு நீர் பாசனத்திற்கு மாறி வருகிறார்கள். வேளாண்மை பொறியியல் துறையில் சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.

10 ஏக்கருக்கு குறைவாக உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், 10 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசன திட்டம் அமைத்து தரப்படுகிறது.

ஆனால் நடப்பாண்டில் ஆயிரம் எக்டருக்கும் குறைவாக இந்த திட்டத்தில் மானியம் வழங்கப்பட்டது. சிறு, குறு விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர், தாசில்தாரிடம் சான்று பெற்று வந்தால் தான் மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதிக கட்டுபாடு விதிக்கப்பட்டதால் ஏழை விவசாயிகள் பலர் சொட்டு நீர் பாசன திட்டத்திற்கு மாற முடியாமல் தவிக்கின்றனர். மானியம் அதிகமாக கிடைத்தால் மேலும் அதிக ஏக்கரில் சொட்டு நீர் பாசன திட்டம் அமைக்க முடியும், '' என்றார்.

## நிலக்கடலை பயிருக்கு தெளிப்பு நீர்பாசன செயல்விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-08-21 11:44:08

வேடசந்தூர்,: வேடசந்தூரில் அட்மா திட்டத்தில், நிலக்கடலை பயிருக்கு தெளிப்பு நீர்பாசன செயல்விளக்க திடல் அமைத்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் முத்துராமலிங்கம், அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜேந்திரன், வேளாண் துறை அலுவலர் சேகர், உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் முத்துராமலிங்கம் பேசியதாவது:

அட்மா திட்டத்தின் மூலம் புளியம்பட்டி கிராமத்தில், நிலக்கடலை பயிருக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தெளிப்பு நீர்பாசனம் மூலம் கடலை பயிரில் சீரான முளைப்பு திறனை பெற முடியும். நீர் மேலாண்மை செய்தல், களையை கட்டுப்படுத்துதல், பயிருக்கு எளிதாக உரமிடுதல், கூலி ஆட்கள் செலவுகளை குறைத்தல் போன்றவை மூலம்

விவசாயிக்கு வருமானம் பெருகும்.
சிறுகுறு விவசாயிகளுக்கு முமு மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிதம் மானியமாகவும் வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு வேடசந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என தெரிவித்தார்.

## அச்சிறுப்பாக்கத்தில் தோட்டக்கலை பயிர் சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-08-21 12:29:44

மதுராந்தகம்,: ஓங்கூர் நீர்வள, நிலவள திட்டம் சார்பில், தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தொழிற்நுட்ப பயிற்சி முகாம் அச்சிறுப்பாக்கத்தில் நடந்தது.
அச்சிறுப்பாக்கம் உதவி இயக்குனர் கோல்வி பிரேமாவதி தலைமை வகித்து, முகாமை தொடங்கி வைத்தார். அச்சிறுப்பாக்கம் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயசீலன், சதாசிவம், சிட்டிபாபு ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.
திட்டங்கள், விவசாயிகளுக்கு வழங்க உள்ள இடு பொருள், தோட்டக்கலை பயிர் சாகுபடி, நவீன தொழிற்நுட்பத்தில் பயிர் சாகுபடி குறித்து விளக்கப்பட்டது. திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்துக்கு விவசாயிகளை அழைத்து சென்று திட்டம் குறித்து செயல் விளக்கமளிக்கப்பட்டது. வேளாண் பொறியியல் துறை, கால்நடைதுறை, அலுவலர்கள் பங்கேற்றனர்.

---